[18th September 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை முன்பே சுலபமாக்கியிருக்கிறோம், சிறிது. விதியைத் தளர்த்தி கோட் வேண்டியதில்லை, ஷர்ட் மட்டும் போட்டால் போதும் என்று தளர்த்தியிருக்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : அலவன்ஸ் கொடுப்பதா இல்லையா என்று முடிவுக்கு வருவதற்கு முன்னால் இப்படிப்பட்ட உடையைத்தான் அணியவேண்டும் என்று இல்லாமல் அப்படி அணியாமல் அவர்கள் பணி செய்யலாம் என்று செய்வதை பரிசிலனை செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. நடைமுறையில் நடக்கிற விஷயம் நமக்குத் தெரியும். அதேபடி கொஞ்சம் நடந்து கொண்டிருந்தால் அதற்குள் இது சரியாகிவிடும்.

SRI A. GOVINDASAMY : ஹெல்த் இன்ஸ்பெக்டர் சம்பளம் கூடுதலாக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அவர்களுக்கு உடை அலவன்ஸ் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். மற்ற இலாக்காக்களில் சம்பள உயர்வு இருந்தும் யூனிபாரம்ஸ் கொடுப்பது மாதிரி இங்கும் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. தேவை உண்டு என்று சொல்லி பார்ட் 2 ஸ்கீமாகக் கொண்டுவந்தோம். அது ஒத்திப்போடப்பட்டிருக்கிறது. அடுத்ததில் வரும். சம்பளம் கொஞ்சம் சம்பளம் அதிகமாக உயர்ந்திருப்பதால் சிறிது "அட்ஜஸ்ட்மென்ட்" செய்து கொள்ளலாம் என்று நான் சொன்னேன்.

DR. SRIMATHI SOUNDARAM RAMACHANDRAN : அலுவல் உடை என்று சொல்லலாம். இல்லாமல் உடை அணியவேண்டுமென்று சொல்வதே கஷ்டமாகயிருக்கிறது. (பதில் இல்லை.)

SRI K. VINAYAKAM : Sir, were any instances brought to the notice of the Government where such of those Health Inspectors that did not conform to the dress regulations were taken to task, or was any disciplinary action taken against them by the department concerned?

THE HON. SRI M. A. MANICKAVELU : No such instances have been brought to my notice.

DEPUTY SPEAKER : Questions 1600 and 1601 are postponed.

Road Development Works (Foreign Aid)

* 1602 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have received any aid for road development works from the aid received from the U.S.A. by the Union Government?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

18th September 1961]

SRI A. A. RASHEED : May I know whether the Government have approached the Union Government for a share in the aid received by them from the U.S.A. for the improvement and development of the highways.

THE HON. SRI P. KAKKAN : For that I have already given a negative answer.

SRI S. NAGARAJA MONIGAR : சாலை அமைப்பில் முன்னணியில் இருந்த நம் மாநிலம் இப்பொழுது பணம் பற்றாக்குறை காரணமாக இரண்டாவது திட்ட வேலைகளை மூன்றாவது திட்ட காலத்தில்கூட முடிப்பதற்கு முடியாத நிலையில் இருக்கிறது என்பதை சர்க்கார் அறிவார்கள் அல்லவா? அப்படியிருக்க மத்திய அரசாங்கத்திலிருந்து ஏதாவது பணம் கிடைப்பதற்கு வழிவகை செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN : நம் மாநிலத்தில் சாலைகள் அமைக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகள் எடுக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. மத்திய அரசாங்கத்திலிருந்து பணமும், நம் மாநிலத்திலிருந்து பணமும் செலவழிக்கப்படுகிறது. மேலும் தேவையானால் மத்திய அரசாங்கத்திற்கு எழுத இந்த அரசாங்கம் பின்வாங்காது.

SRI A. V. P. ASAITHAMBI : வெளி நாடுகளிலிருந்தும் நம் நாட்டிற்கு பலவிதத்தில் உதவி வந்துகொண்டிருக்கிறது. அந்தமாதிரி முறையில்தான், அமெரிக்காவிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கு சாலை அமைப்பதற்காக பணம் கொடுத்திருக்கிறார்கள். மொத்தம் அமெரிக்காவிலிருந்து எவ்வளவு பணம் கொடுத்தார்கள்? அதை எந்தளவு பயன்படுத்தவேண்டுமென்று கொடுத்தார்கள் என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால், இம்மாநிலத்திற்குரிய பங்குத் தொகையைக் கேட்டு வாங்குவது இந்த அரசாங்கத்தின் கடமை அல்லவா? அப்படிக் கேட்கத் தவறியதற்குக் காரணமென்ன?

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் அவர்கள் இந்தக் கேள்வியை பார்லிமென்ட் அங்கத்தினர்களிடம் சொல்லி அங்கு இதைக் கேட்குமாறு செய்தால் நன்றாகயிருக்கும்.

SRI A. GOVINDASAMY : மத்திய அரசாங்கம் நேரடியாக நிர்வகிக்கும் ரோடுகளை பராமரிக்கவாவது சென்னை அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து, அமெரிக்காவிலிருந்து வந்த தொகையிலிருந்து ஒரு விகிதாசாரம் கொடுக்கும்படி நமது அரசாங்கம் அவர்களை வற்புறுத்தியதா?

THE HON. SRI P. KAKKAN : முன்பே இல்லை என்று சொல்லி விட்டேன்.

SRI T. SAMPATH : Sir, have the Government any idea of approaching the United States of America for such aid?

THE HON. SRI P. KAKKAN : Not directly.

SRI A. V. P. ASAITHAMBI : அமெரிக்காவிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கு சாலை அமைப்பிற்காக ஒரு தொகை வந்திருக்கிறது என்ற காரணத்தினால், அது எவ்வளவு வந்திருக்கிறது, அதில் எங்களுக்குரிய பங்கு என்ன என்று இனிமேலாவது இந்த அரசாங்கம் எழுத முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவலை என்னிடம் இப்பொழுது இல்லை.

SRI T. KARIA GOUNDER : தமிழ்நாடு மாநிலத்திற்கு மட்டும் அமெரிக்க அரசாங்கம் மூன்று கோடி ரூபாய் மதிய உணவு நிதிக்காகக் கொடுத்திருக்கிறார்களே, அதை மாவட்ட வாரியாகப் பிரித்துக்கொடுக்க சென்னை அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : நிதியமைச்சர் அவர்களிடம் இந்தக் கேள்வியைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

UNSTARRED QUESTIONS.

Second Five-Year Plan (Expenditure).

* 201. *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஜில்லாவாரியாகச் செலவு செய்த தொகை எவ்வளவு ?

A.—The time and labour involved in collecting the districtwise break up figures of expenditure incurred on implementing the schemes under the First Five-Year Plan will not be commensurate with the public interest served now. As regards the Second-Five-Year Plan, the attention of the Member is invited to the reply given to clause (*a*) of the unstarred question No. 98 placed on the Table of the House on 31st August 1961.

Third Plan.

* 202. *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மூன்றாவது திட்டத்தில் ஜில்லாவாரியாக அங்கீகரித்த திட்டங்கள் அச்சடித்து மேஜைமீது வைக்கப்படுமா ? ஜில்லா வாரியாக ஆகும் செலவின் விபரமென்ன ?

A.—The preparation of District Plans under the Third Plan on the basis of Development Districts is receiving attention. They will be placed on the Table of the House in due course. They will also contain information regarding the proposed expenditure for each district.

Vedasandur-Bodinayakanur Bus Service.

* 203. *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—